தமிழரும் அவர்கள் மதங்களும்

சிவ தியாகராஜர்
(ஒரு பேப்பருக்காக)

நம்மில் பலர் மத அபிமானம் கொண்டவர்கள். இன்னும் பலர் மதப்பற்று கொண்டவர்கள். மற்றும் சிலர் மதவெறி கொண்டவர்கள். வெகு சிலர் தமது மதத்தை தாமே இழித்துக் கூறுபவர்கள்.

இவ்வாறே மொழி அபிமானம், மொழிப்பற்று, மொழிவெறி ஆகிய நிலைப்பாடு கொண்டோரும் உள்ளனர். மறுபக்கத்தில் தமது மொழியைப் பேசுவதும், எழுதுவதும் தரக் குறைவானது, ஆங்கிலத்தில் பேசுவதே அழகு என்ற நிலைப்பாடு கொண்டோரும் உள்ளார்கள்.

இதுபோன்ற மதப்பற்று, மதவெறி, மதஇழிப்பு, மொழிப்பற்று மொழிவெறி, மொழிஇழிப்பு ஆகிய குணநலன்களைக் கொண்டவர்களில் பலர் தாம் கொண்ட கருத்துக்களை நிலை நிறுத்துவதற்காக அதற்குச் சாதகமாக வரலாற்றையும், வரலாற்று நிகழ்வுகளையும் மழுப்பியும், திரித்தும் கூறத் தயங்கமாட்டார்கள்.

இன, மத உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல், பக்கச் சார்பின்றி நடுநிலை நின்று, வரலாற்றை விஞ்ஞான பூர்வமாக ஆராய்பவனே கற்கை நெறி கொண்ட வரலாற்றியலாளன் ஆவான்.

இன்றைய மதவாதிகள் ஏற்றுக்கொள்ள மறுக்கும் கசப்பான பல உண்மைகளை முன்வைத்தமைக்காக திரு. இளங்கோ (சைவமும் தமிழும் ஒரு பேப்பர், பெப்ரவரி 1, 15) பாராட்டப்பட வேண்டியவர். அதே சமயம் சில முக்கிய வரலாற்றுத் தகவல்கள் அவரால் கூறப்படவில்லை. அவரால் தவிர்க்கப்பட்டதும் சில இடங்களில் அவரால் மிகைப்படுத்தப்பட்டதுமான சில வரலாற்று உண்மைகளை எடுத்துரைப்பதை இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சைவ மதத்தின் மூல வேர்கள்

நிறுவனப்படுத்தப்பட்ட சமயக் கொள்கைகளையே இன்று நாம் 'சமயம்' அல்லது 'மதம்'என்ற பெயரால் அழைக்கிறோம். இற்றைக்கு 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் எந்த மதமும் நிறுவனப்படுத்தப்படவில்லை.

தமிழகத்தில் சைவ சமயம் நிறுவனப்படுத்தப்பட்ட ஒரு சமயமாக உருவாக்கப்பட்ட காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டாகும். அதற்கு முற்பட்ட இந்திய இலக்கியங்கள் எதிலும் 'சைவ மதம்' என்ற பெயரால் ஒரு சமயம் பதிவுசெய்யப்படவில்லை என்பது மறக்க முடியாத உண்மை.

அதற்காக சைவசமயம் ஏழாம் நூற்றாண்டில் தான் ஆரம்பிக்கப்பட்டது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம்.

ஆதியில் வாழ்ந்த மக்கள் வழிபட்ட தெய்வங்களை, அவர்களின் வழிபாட்டு முறைகளை, தெய்வ சம்பந்தமாக அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளை 'மதம்' என்ற பெயரால் எவரும் குறிப்பிடவில்லை. ஏனெனில் மதம் என்றொரு கோட்பாடு அவர்கள் வாழ்ந்த காலத்தில் இருக்கவில்லை. ஆனால் இக்கால மதக் கோட்பாடுகளைக் கொண்டு அக்காலத் தெய்வ நம்பிக்கைகளையும், கொள்கைகளையும நாம் ஆய்வு செய்ய முற்படுவோமானால் அவற்றை ஒரு மதம் என்றோ, மதக் கொள்கைகள் என்றோ கூறித்தானாக வேண்டும்.

மற்றைய உலக மதங்களைப் போல் சைவசமயம் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், ஒரு குறிப்பிட்ட இனப்பிரிவினரால் ஏற்படுத்தப்பட்ட மதம் எனக் கூறமுடியாது.

சைவசமயத்தின் தோற்றத்தில், அதன் உருவாக்கத்தில்-அதன் வளர்ச்சியில், வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு மொழிப் பிரிவினர் முக்கிய பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். அவர்களாவன

'முண்டா' எனப்படும் ஒஸ்ரிக் மொழி பேசிய இந்திய உபகண்டத்தின் ஆதி வாசிகளான 'ஒஸ்திரலோயிட்' (Australoid]) இனத்தவர்.

கி.மு.8000 ஆண்டுகாலப் பகுதியில் மத்திய தரைக்கடல் பிராந்தியங்களிலிருந்து வட மேற்கு இந்தியா வழியாக வந்து இந்து நதிப்பிரதேசங்களிலும், வட இந்தியா, மத்திய இந்தியா, தென் இந்தியா ஆகிய பிரதேசங்களிலும் குடியேறிய 'ஏழு' மொழி பேசிய ஆதித்திராவிடர்கள் (Proto Elamo Dravidians)

கி.மு1800 ஆண்டுக்காலப் பகுதியில் மத்திய ஆசியாவின் கஸ்பியன் கடற் கரைப் பிரதேசங்களிலிருந்து ஈரான் வழியாக இந்தியாவுக்கு வந்து குடியேறிய இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப் பேசிய ஆரியர்கள்.

ஆதிவாசிகளின் மத நம்பிக்கைகள்

இந்திய நாட்டின் ஆதிவாசிகளான ஒஸ்திரலோயிட் மக்களிடம் யக்ஷி, நாக வழிபாடுகள் முக்கிய இடத்தை வகித்தன. இவ் வழிபாட்டில் இயற்கை சக்திகளில் மரங்களில், ஆறுகளில், மலைகளில், குன்றுகளில், -தெய்வங்கள் வாழ்கிறார்கள் என்கின்ற நம்பிக்கை மேலோங்கியிருந்தது.

இன்றைய சைவ(இந்து) மதத்தின் அடிநாதமாக விளங்கும் உருவ வழிபாட்டின் ஆரம்ப கர்த்தாக்கள் இந்த ஆதி மனிதர்களே என்பதை ஆனந்தா குமாரசாமி அற்புதமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.(Coomaraswamy - 1971)

சைவ(இந்து) மதத்தில் இன்று வரை நிலவி வரும் லிங்க வழிபாட்டை ஆரம்பித்து வைத்த பெருமைக்குரியவர்கள் இந்த ஆதி ஒஸ்திரலோயிட் மக்களே (Majumdar R.C - 1957)

ஆத்மா பற்றிய நம்பிக்கை, மறுபிறப்பு பற்றிய உணர்வு, தீட்டுப் பற்றிய கருத்து, பிற உயிர்கள் மீது அன்பு செலுத்துதல், வணக்கத்திற்குரிய இடங்களைப் புனிதமாகப் பேணுதல் ஆகிய பண்புகள் வரலாற்றுக்கால இந்து / சைவ மதத்தில் விரிவு படுத்தப்பட்டு வரையறையான உருவங் கொடுக்கப்பட்டிருந்த போதிலும்,இதன் மூலவேரை இடைக்கற்காலத்தில் வாழ்ந்த ஒஸ்திரலோயிட மக்களின் கலாச்சாரத்தில் காணலாம் என மானிட வியலாளரான மலோனி குறிப்பிடுகிறார். (Maloney C.T - 1975)

நிற்க, இலங்கை என்ற பெயர் குறித்து ஆய்வு செய்தால், தமிழிலோ, சிங்களத்திலோ, சமஸ்கிருதத்திலோ, பாளிமொழியிலோ 'லங்கா' (இலங்கை) என்ற பதம் ஒரு நாட்டின் பெயரைக் குறிப்பிடுகிறதே ஒழிய அச்சொல்லிற்கு அந்த மொழிகளில் வேறு கருத்து இல்லை. ஆனால் முண்டா மொழியில்'லங்கா' என்றால் கடலால் சூழப்பட்ட தீவு என்று பொருள்படும்.

இலங்கைத் தீவுக்கு 'லங்கா' என்ற பெயரைச் சூடிய வர்கள் முண்டா மொழி பேசிய ஒஸ்திரலோயிட் மக்களே. இலங்கையில் இன்றுவரை வாழ்ந்து வரும் வேடர் இந்த ஒஸ்திரலோயிட் மக்களின் நேரடி வம்சாவழியினராவார்.

(தொடரும்)

தொடக்க இருக்கும் நிகழ்வுகள்

MAR 21 — FRIDAY @ **9.26 AM**

குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக் கோயிலில் புனராவர்த்தன குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா

180-186 Upper Tooting Road, London, SW17 7EJ

தொடர்புகளுக்கு: 020 9767 9881

MAR 22 — SATURDAY @ **5:30PM**

சாரங்க மாலை

ஸ்ரான்லி கல்லூரி பழைய மாணவர் சங்க பிரித்தானிய கிளையின் 11வது வருடாந்த ஒன்று கூடல்

Winston Churchil Theatre, Pinn way, Ruislip, HA4 7QL

தொடர்புகளுக்கு: 079 5644 6195, 078 8414 0912, 020 8810 9931

MAR 22/23 — SAT/ SUN @ **9AM**

சமாதானப் பாதையில் ஒரு பயணம்

இலங்கை இனப்பிரச்சினை மீதான சர்வதேச கருத்தாடல் நிகழ்வு

University of East London, Dockland Campus, University Way, London, E16 2 RD

தொடர்புகளுக்கு: 0208 586 7856, 0208 426 4851, 0208 997 1057

MAR 23 — SUNDAY @ **6PM**

அஞ்சலி நிகழ்வு

விளையாட்டு அதிகாரி றோகான் ராஜசிங்கம் அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு

Scout hall, Dell Lane, Stonleigh (*அம்மன் கோயில் அருகாமையில்)*

MAR 29 — SATURDAY @ **10AM**

முத்தமிழ் விழா

சிவயோக கலை அரங்கத்தின் கலை நிகழ்வு

180-186 Upper Tooting Road, London, SW17 7EJ

தொடர்புகளுக்கு: 020 9767 9881

MAR 29 — SATURDAY @ **6PM**

இறுவட்டு வெளியீடு

பாவலர் வல்வைத் தேவன் இயற்றிய தாயக கானங்கள் இன்னிசை கானங்கள் ஆகிய இறுவட்டுக்கள்

St Barnabas Church Hall, Thirsk Road, Mitcham, CR4 2BD

தொடர்புகளுக்கு: 020 8404, 1061, 079 3028 2611,

Apr 13 — SUNDAY

விளையாட்டுப் போட்டி

பிரித்தானிய தமிழ் விளையாட்டுச் சபையின் விளையாட்டுப் போட்டி

விபரங்களுக்கு : 075 0647 5923, 079 0800 05700, www.bt-sc.com

Fancy a website?

Stand out from the crowd!

orudirectory.com